## நேர்காணல் கேள்வி 01:

உங்களைப் பற்றி என்னிடம் சொல்லுங்கள்?

**ஆங்கில வடிவில்:**

Tell me about yourself?

**கேள்வியின் நோக்கம்:**

- இந்தக் கேள்வி பெரும்பாலும் உங்களைப் பற்றிய சுவாரஸ்யமான விஷயம் ஏதாவது ஒன்றை தெரிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக கேட்கப் படுகிறது.

- அது மட்டுமின்றி, நீங்கள் துணிவுடன் பேசுகிறீர்களா என்பதை தெரிந்து கொள்ளவும் கேட்கப்படுகிறது.

**எவ்வாறு பதிலளிப்பது?**

- இந்த நேர்காணல் கேள்வியின்போது அளிக்கப்படும் பதில்கள் நீங்கள் ஏற்கனவே சமர்ப்பித்த உங்கள் Resume-ல் குறிப்பிட்டுள்ள வரிசையில் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

- அதாவது, உங்கள் பெயர் (பெயர் நீளமாகவோ அல்லது உச்சரிக்க கடினமான பெயராக இருந்தால், அதைச் சுருக்கி, எந்தப் பெயரால் உங்களை அழைக்கலாம் என்று கூறுங்கள்), ஊர், கல்வித்தகுதி (பட்டம், பள்ளி), பிடித்த பாடம், வேலை அனுபவம் (ஏதாவது இருந்தால்), கூடுதல் பாடநெறி சாதனைகள் (Extracurricular activities), குடும்பப் பின்னணி, சுவாரஸ்யமான வாழ்க்கை அனுபவங்கள், பொழுதுபோக்குகள் ஆகியவைப் பற்றி கூறலாம்.

- இதில் உங்கள் கல்வித்தகுதியைச் சொல்லும்போது அதைப்பற்றி சிறப்பாகச் சொல்லுங்கள். அதாவது நீங்கள் முதல் வகுப்பிலோ, சிறப்புத் தகுதியோ (Distinction) பெற்றிருந்தால் அதைக் குறிப்பிடுங்கள்.

- உங்களின் சாதனைகள் அனைத்தையும் திறமையாக வெளிக்காட்ட நேர்முகத் தேர்வு ஒரு பொன்னான வாய்ப்பு ஆகும். இதை நீங்கள் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

- அடுத்து உங்களிடம் இருக்கும் சிறப்பான திறமைகளைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். அதாவது உங்களின் மென் திறன்களை (Soft Skills) குறிப்பிட வேண்டும்.

**எடுத்துக்காட்டாக,**

- திறமையான பேச்சுத் திறன் (Effective Communication Skills),
- சக ஊழியர்களிடம் உறவாடும் திறன் (Inter Personal Skills),
- பகுப்பாய்வுத் திறன் (Analytical Skills),
- விரைவாகக் கற்கும் கலை (Art of Quick Learning),
- நேர்மறைச் சிந்தனை (Positive Thinking)

இது போன்று உங்களிடம் இருக்கும் மென் திறன்கள் பற்றிக் கூறலாம்.

- இது போன்று பதில்கள் நேர்காணலில் உங்களின் வெற்றி வாய்ப்பைப் பன்மடங்கு உயர்த்திவிடும்.

- இவை பற்றி உங்களின் Resume-ல் குறிப்பிட்டிருந்திருந்தாலோ அல்லது நேர்காணலில் கூறினாலோ, கட்டாயம் அடுத்துவரும் கேள்விகள் இவை பற்றியனவாகத்தான் இருக்கும். அவற்றிற்கும் சரியான பதில் அளித்துவிட்டால் நீங்கள் நேர்காணலில் நிச்சயம் வெற்றி பெற்றுவிடலாம்.

**குறிப்பு:**

இந்தக் கேள்விக்கான உங்களின் சிறந்த பதில், மேற்கூறியவாறு சுருக்கமாகவும், அதிக பட்சமாக ஒரு நிமிடத்திற்கு உள்ளாகவும் இருக்க வேண்டும். அதுமட்டுமின்றி, நீங்கள் கூறும் பதில் தெளிவாகவும், தன்னம்பிக்கையுடனும் மற்றும் பரவசமான முறையிலும் இருக்க வேண்டும்.

## நேர்காணல் கேள்வி 02:

உங்கள் பலம் மற்றும் பலவீனங்கள் என்ன?

**ஆங்கில வடிவில்:**

What are your strengths and weaknesses?

**கேள்வியின் நோக்கம்:**

நீங்கள் விண்ணப்பித்த வேலைக்கு தேவையான திறமை, அனுபவம் மற்றும் அணுகுமுறை உங்களிடம் இருக்கிறதா என்பதை அறிந்துக் கொள்வதற்காக நேர்காணல் செய்பவர்கள் இந்த கேள்வியை கேட்கின்றனர்.

மேலும் உங்களிடத்தில் உள்ள வலிமையை மதிப்பீடு செய்யவும், அப்பணியை கையாளுவதற்கான ஆற்றல் குறைபாடு (Potential Issues) ஏதேனும் உள்ளதா என்பதையும் இந்த கேள்வியின் மூலம் அறிந்துக் கொள்வார்கள்.

**எவ்வாறு பதிலளிப்பது?**

- இந்த கேள்விக்கு சாதுரியமாக பதிலளிக்க வேண்டும். ஏனெனில் இது ஒரு தந்திரமான கேள்வியாகும். உங்களுடைய சொந்த பலம் உங்களுக்கு தெரியும் என்பதால், பதில் மிக சுருக்கமாகவும் நேர்மையானதாகவும் இருக்க வேண்டும். உங்களுடைய வலுவான திறமைகள் மற்றும் ஆளுமை பண்புகளைப் பற்றி நீங்கள் தெளிவாக சொல்ல வேண்டும்.

- உங்களுடைய சிறப்பம்சங்களை உயர்த்திக் கூறலாம். எடுத்துக்காட்டாக, நீங்கள் ஒரு நல்ல படைப்பாற்றல் மிக்கவர், பகுப்பாய்வு திறன் உள்ளவர், வலுவான அணி வீரர், தலைமை திறன்கள் கொண்டவர், வலுவான மொழி ஆளுமைத் திறன்கள் உள்ளவர் - இது போல கூறலாம்.

- உங்களுடைய முன்னால் வேலை அனுபவத்திலிருந்து சில உதாரணங்களை எடுத்துக் காட்டி உங்கள் பலங்களை தெளிவுப் படுத்தலாம்.

- பலவீனம் பற்றி கூறும்போது கவனமாகப் பதிலளிக்காவிட்டால், உங்களுக்கு அது எதிராகச் செல்லலாம்.

பலவீனங்களைப் பற்றிய கேள்விக்கு ஒரு நுட்பமான வழியில் பதிலளிக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டாக,**

- மொழி ஆளுமை
- நீண்ட காலமாகக் கவனம் செலுத்துவது
- உள்முகச் சிந்தனையாளர்களாக இருப்பது
- ஒரு சூழ்நிலையின் பல அம்சங்களைக் கட்டுப்படுத்த விரும்புவது
- தள்ளிப்போடுதல்
- ஒழுங்கமைக்காமை

இது போன்ற பலவீனங்களை கூறலாம்.

பலம் அல்லது பலவீனம் என்று எதுவும் இல்லை. நீங்கள் நீண்ட நேரம் எதையாவது பயிற்சி செய்ததை நிறுத்தும்போது அது உங்கள் பலவீனமாக மாறும். நீங்கள் மீண்டும் அந்த விஷயங்களில் தொடர்ந்து வேலை செய்யத் தொடங்கினால், அதுவே உங்கள் பலமாக மாறும்.

**எடுத்துக்காட்டுகள்:**

- காலக்கெடு குறுகியதாக இருந்தாலும், திறமையான Coding எழுதுவதும், Project-களை சரியான நேரத்தில் வழங்குவதே என் பலமாகும்"என்று கூறலாம்.

- உங்களுக்கு ஒரு பலவீனம் இருப்பதாக நீங்கள் நினைத்தால், "அன்றிலிருந்து பயிற்சி செய்ய ஆரம்பித்து அதை நான் சரி செய்துவிடுவேன்"என்று நேர்மறையாக பதிலளிக்கவும்.

- இருப்பினினும் சில நேரங்களில் நான் பயனற்ற கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தருகிறேன், அதை சரி செய்ய முயன்று வருகிறேன்"என்றும் கூறலாம்.

**குறிப்பு:**

உங்கள் பதிலை முடிக்கும் பொழுது, நீங்கள் நேர்காணல் செய்பவரிடம் பலவீனத்தை மேம்படுத்துவதற்கு முயற்சி செய்கிறீர்கள் என்பதை மறக்காமல் அறிவியுங்கள்.

---

## நேர்காணல் கேள்வி 03:

நாங்கள் ஏன் உங்களை வேலைக்கு அமர்த்த வேண்டும்?

**ஆங்கில வடிவில்:**

Why should we hire you?

**கேள்வியின் நோக்கம்:**

இந்த கேள்வி உங்களின் திறமைகள், தகுதிகள் மற்றும் அறிவை பற்றிய தகவல்களை தெரிந்துக் கொள்வதற்காக கேட்கப்படுகிறது.

அதுமட்டுமின்றி, நீங்கள் எவ்வாறு விண்ணப்பித்த வேலைக்கும் அந்த நிறுவனத்திற்கும் பொருத்தமானவரா என்பதை அறிந்துக் கொள்வதற்காக நேர்காணல் செய்பவர்கள் இந்த கேள்வியை கேட்கின்றனர்.

**எவ்வாறு பதிலளிப்பது?**

- உங்களுடைய தொழிற்முறை சாதனைகள், மற்றும் உங்களின் அறிவாற்றல், அல்லது ஒரு குறிப்பிட்ட தொழிற்துறையில் ஏதாவது சாதித்திருந்தால் அதை கூறலாம்.
- நிறுவனத்தின் கண்ணோட்டத்தில் இந்தக் கேள்வி மிகவும் சரியானது. எனவே, உங்களிடம் போதுமான திறமையும் அறிவும், வேலையில் உங்களது பங்களிப்பை சரியாக செலுத்துவீர்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக நீங்கள் பதிலளிக்க வேண்டும்.
- இப்படியும் நீங்கள் கூறலாம் - நிறுவனத்தை மேம்படுத்த நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதை பற்றியும் கூறலாம்.
- உங்களுடைய பதில் நேர்காணல் செய்பவரை ஈர்க்கக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டுகள்:**

- என்னிடம் கற்றுக்கொள்ளும் திறனும் ஒரு வேலையைச் சரியாக செய்யக்கூடிய ஆற்றலும் இருப்பதனால் என்னை நீங்கள் வேலைக்கு அமர்த்தலாம்.

- உங்கள் நிறுவனத்தில் என்னிடம் எதிர்பார்க்கப்படுவது எதுவாக இருந்தாலும், அதை எனது சிறந்த திறன்களாலும் கடின உழைப்பினாலும் நிச்சயமாக செய்வேன்.

- உங்களை வேலைக்கு அமர்த்துவதற்கான வாய்ப்பை, மற்ற அனைவரையும் விட, நீங்கள் கூறும் பதில் உங்களை தனித்து காட்ட வேண்டும். அப்படியென்றால் நிச்சயமாக உங்களுக்கு வேலை கிடைக்கும்.

**குறிப்பு:**

உங்கள் சாதனைகளை பற்றிக் கூறும்போது தெளிவாக கூற வேண்டும். உங்களது பதில் குறுகிய தகவலை கொண்டிருந்தாலும் கூட தவறில்லை. ஆனால், பதில் தெளிவாக இருக்க வேண்டும்.

---

## நேர்காணல் கேள்வி 04:

தற்போது முதல் 5 வருடங்களுக்குப் பிறகு உங்களை நீங்கள் எங்குக் காண்பீர்கள்?

**ஆங்கில வடிவில்:**

Where do you see yourself after 5 years as a professional?

**கேள்வியின் நோக்கம்:**

முதலாவதாக, வேலைக்கு விண்ணப்பித்தவர் எந்த அளவுக்கு அந்த வேலை தொடர்பான தொழிற்துறை, பிரிவுகள் மற்றும் நிறுவனத்தின் அதிகாரத்துவ முறை ஆகியவற்றை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார் என்பதை தெரிந்துக் கொள்வதற்கு இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது.

இரண்டாவதாக, இந்தப் பதில் மூலம், ஒரு நபர் எந்த அளவுக்குத் தொழில் வாழ்க்கையில் கவனமாகவும் மற்றும் இலட்சியவாதியாகவும் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்வார்கள்.

**எவ்வாறு பதிலளிப்பது?**

- இந்த கேள்விக்கு உங்கள் பதிலை தயார் செய்யும் முன்பு,நீங்கள் விண்ணப்பித்த வேலை நிலையிலிருந்து அடுத்தடுத்து வரும் தொழிற்முறை வாழ்க்கை பாதை என்ன என்பதை நீங்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

- இதை விண்ணப்பித்த நிறுவனத்தின் வலைதளங்கள் மூலமாகவோ அல்லது தொழிற்முறை நண்பர்கள், உறவினர்கள் மூலமாகவோ நீங்கள் அறிந்துக் கொள்ளலாம்.

- அனைத்து வேலைகளுக்கும் உயர் பதவிகள் இருப்பதில்லை. எனவே நீங்கள் விண்ணப்பித்த வேலையின் தொழிற்முறை வாழ்க்கை பாதை என்ன என்பதை தெரிந்துக் கொள்ள வேண்டியது மிக அவசியம். அவ்வாறு உயர் பதவிகள் இல்லையெனில், உங்கள் பதிலை அதற்கு ஏற்றவாறு வடிவமைக்க வேண்டும்.

- வேலைக்கு விண்ணப்பிப்பவருடைய நேர்மறையான அணுகுமுறை, தொழில் வாழ்க்கையின் இலட்சியங்கள், மற்றும் தொழில் மீது கவனம் ஆகியவற்றை நேர்க்காணல் நடத்துபவருக்கு எடுத்துக் காட்டும் விதமாக உங்கள் பதில் அமைய வேண்டும்.

**எடுத்துக்காட்டுகள்:**

- நீங்கள் ''மூத்த நிர்வாகத்தின் மூலோபாயத் (Stratagy) திட்டங்களைப் பற்றி முடிவுகளை எடுக்கும் பணிகளில் ஒரு பகுதியாக இருக்க விரும்புகிறேன்'' என்று சொல்லலாம்.

- ஒரு புதிய தொழில் நிறுவனத்துடன் இணைந்து செயல் பட போவதகாவும் கூறலாம்.

சில சமயங்களில் தொழிற்துறை சார்ந்த பக்கம் இருப்பது வேலை தேர்வுக்குரியவர் நன்றாக வேலை செய்யக்கூடியவர் என்பதை தெரியப்படுத்தும்.

- சில முக்கிய தொழில்நுட்ப சான்றிதழ்களை நான் பெற்று அதன் மூலம் நிறுவனத்தின் வளர்ச்சியை உயர்த்தி நானும் நிறுவனத்தின் முக்கியமான பொறுப்புடன் உயர்ந்திருப்பேன்.

**குறிப்பு:**

உங்களுடைய பதிலானது, தொழிலில் உங்களுடைய உயர் இலட்சியங்கள் என்ன என்பதைத் தீர்மானிக்க உதவுமாறு இருக்க வேண்டும்.

## நேர்காணல் கேள்வி 05:

நீங்கள் தலைமைத்துவ திறன்களை வெளிப்படுத்திய ஒரு சமயத்தைப் பற்றி என்னிடம் சொல்ல முடியுமா?

**ஆங்கில வடிவில்:**

Tell me about a time you demonstrated Leadership Skills.

**கேள்வியின் நோக்கம்:**

- நேர்காணல் செய்பவர், இந்த நடத்தை வேலை நேர்காணல் கேள்வியின் மூலம் உங்கள் கடந்தகால வேலை செயல்திறனைப் பற்றி புரிந்துக் கொள்வார்.

- இந்த கேள்விக்கான பதில் மூலம், உங்கள் கடந்தகால செயல்திறனைக் கொண்டு உங்கள் எதிர்கால செயல்திறனை நேர்காணல் செய்பவரால் எளிமையாக கணிக்க முடியும்.

- அதுமட்டுமின்றி, இந்த பதிலைக் கொண்டு, நேர்காணல் மூலம் யாரை வேலைக்கு அமர்த்துவது என்பதை தீர்மானிப்பதற்கான காரணியாக உங்கள் பதிலைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

**எவ்வாறு பதிலளிப்பது?**

இந்த கேள்விக்கான பதிலை நீங்கள் தயாரிக்கும் முன்பு, STAR அணுகுமுறையை பின்பற்ற வேண்டும்.

**STAR என்பதன் விரிவாக்கம்:**

- Situation (சூழ்நிலை)
- Task (பணி)
- Approach/Action (அணுகுமுறை/செயல்பாடு)
- Results (முடிவுகள்)

அதாவது நீங்கள் கூறும் பதில் இந்த வரிசையில் தான் இருக்க வேண்டும்.

- நீங்கள் தலைமைத்துவ திறன்களை வெளிப்படுத்திய நேரத்தை விவரிக்கும்படி கேட்கும்போது, நீங்கள் சமீபத்தில் நடந்த உதாரணத்தைதான் சொல்ல வேண்டும்.

- நீங்கள் வழிநடத்திய ஒரு குழு (Team) அல்லது திட்டத்தைப் (Project) பற்றி பொதுவான பதிலைக் கொடுப்பதற்கு பதிலாக, உங்களால் முடிந்தவரை விரிவான பதிலாகக் கொடுக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**உதாரணம்:**

STAR வடிவில் பதிலை எவ்வாறு கட்டமைப்பது?

- **Situation (சூழ்நிலை):**

உங்கள் பதிலை தொடங்கும்போது நீங்கள் சந்தித்த சமீபத்திய சூழ்நிலையை குறித்து நேர்காணல் செய்பவரிடம் சொல்லத் தொடங்குங்கள்.

- **Task (பணி)**

அந்த சூழ்நிலையின்போது, உங்கள் பணி என்ன, உங்கள் நோக்கம் என்ன? அதாவது, நீங்கள் செய்து முடிக்க வேண்டிய தேவை என்ன இருந்தது? என்பதைச் சொல்லுங்கள்.

- **Approach/Action (அணுகுமுறை/செயல்பாடு)**

உங்கள் பணியை நிறைவேற்ற என்ன நடவடிக்கைகள் எடுத்தீர்கள்? நீங்கள் என்ன செய்தீர்கள்? ஏன் அந்த நடவடிக்கையை எடுத்தீர்கள்? ஒருவேளை, நீங்கள் குறிப்பிட்ட அந்த சூழ்நிலையில் ஏதேனும் மாற்று வழிகள் இருந்தால் அதையும் நீங்கள் நேர்காணல் செய்பவரிடம் சொல்லலாம்.

- **Results (முடிவுகள்)**

இறுதியாக, உங்கள் செயல்களின் முடிவுகளைப் பற்றி கூறுங்கள். உங்கள் செயல்களின் விளைவு என்ன? உங்கள் நோக்கத்தை நீங்கள் அடைந்தீர்களா? என்பதைக் கூறுங்கள்.

அதுமட்டுமின்றி, நீங்கள் அந்த அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்டவற்றைப் பற்றியும், மற்ற சூழ்நிலைகளிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டவற்றைப் எப்படி பயன்படுத்தினீர்கள்என்பதையும் கூறுங்கள்.

**குறிப்பு:**

நீங்கள் விண்ணப்பித்த நிறுவனம் உங்களிடம் எதிர்பார்க்கும் திறன்கள் என்ன என்பதை அறிந்து அதற்கேற்றவாறு உங்களது பதிலை தயாரித்தல் நல்லது.

அதே போன்று, உங்கள் பதில் மற்ற விண்ணப்பதாரரிடமிருந்து தனித்து இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

---

## நேர்காணல் கேள்வி 06:

தொழில் முறையாளராக உங்கள் மிகப்பெரிய சாதனை என்ன?

**ஆங்கில வடிவில்:**

What is your greatest professional accomplishment?

**கேள்வியின் நோக்கம்:**

நீங்கள் நிரூபித்த உங்கள் பணியைப் பற்றிய நுண்ணறிவைப் பெறுவதற்கும், நீங்கள் எந்த சாதனைகளை மிக மதிப்புமிக்கதாகவும் முக்கியமானதாகவும் கருதுகிறீர்கள் என்பதையும் அறிந்துக் கொள்வதற்கு இந்த கேள்வி கேட்கப்படுகிறது.

- நீங்கள் சாதனை என்று எதை கருதுகிறீர்கள்? அதை அடைவதற்கு நீங்கள் செய்து நிரூபித்த வேலை என்ன?
- நீங்கள் படைத்த சாதனைகளில் "மிகப் பெரியது"என்று கருதுவது எது? அவ்வாறு அதைக் கருதுவது ஏன்?
- மேலும், உங்கள் வேலையின் குறிப்பிடும் எடுத்துக்காட்டுகள் ஆகியவற்றை பற்றி அறிவதில் நேர்காணல் செய்பவர்கள் ஆர்வமாக இருப்பார்கள்.

இவை அனைத்தும், நீங்கள் முடித்த திட்டங்கள் மற்றும் அவர்கள் உங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கலாம் என்பதை பற்றி அவர்களுக்கு ஒரு யோசனையை அளிக்கிறது.

**எவ்வாறு பதிலளிப்பது?**

- முதலில் உங்கள் சாதனைககளை பட்டியலிட்டுக் கொள்ளுங்கள்.